**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 214/2025**
**Prosecution Witness**:1

| Name | பாவாத்தாள் (PW1) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of July 2026** by G.Kiruthiga Bench Clerk Grade III, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கொளாநல்லி, பழைய இரயில் நிலையம் அருகில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் துரைசாமி சுமார் 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனக்கு சக்திவேல், சண்முகம், சரணவன் என மூன்று மகன்கள். கடந்த 06.10.2025ம் தேதி இரவு 09.50 மணிக்கு நானும் எனது மகன் சண்முகமும், வீட்டிற்கு முன்பு பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எனது இளைய மகனும் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தார், நாங்கள் மூவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தெற்கில் இருந்து வேகமாக வந்த ஆம்னி கார் எனது நடு மகன் சண்முகத்தின் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது, மோதியதில் எனது மகன் சண்முகத்திற்கு தலையில் அடிபட்டுவிட்டது. சம்பவத்தை நானும் எனது இளைய மகனும் பார்த்தோம். எனது இளைய மகன் சரவணன் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து எனது மகன் சண்முகத்தை கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். எனது மகன் சண்முகம் இறந்துவிட்டார். மறுநாள் காலை என்னை மலையம்பாளையம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். என் மகன் மீது மோதிய ஆம்னி காரை ஓட்டுவந்தவர் பெயர் குட்டபாளையத்தை சேர்ந்த பிரவீன். நான் சம்பவம் தொடர்பாக மலையம்பாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.20 13:12:52 +0530

**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :—**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:— இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.20 13:12:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 214/2025**
**Prosecution Witness**:2

| | | | |
|---|---|---|---|
| Name | **சக்திவேல்** (PW2) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of July 2026** by G.Kiruthiga Bench Clerk Grade III, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கொளாநல்லி, கரட்டூரில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாவாத்தாள் எனது அம்மா. விபத்தில் இறந்துபோன சண்முகம் எனது தம்பி. கடந்த 06.10.2025ம் தேதி இரவு 10.00 மணிக்கு நான் எனது வீட்டில்இருந்தபோது எனது தம்பி சண்முகம் கொளாநல்லி, ஈரோடு - கரூர் தார் சாலையை ஒட்டி அமைந்துள்ள எங்கள் வீட்டின் முன்பு உட்கார்ந்து மற்றொரு தம்பி மற்றும் அம்மாவுடன் பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது கரூரில்இருந்து ஈரோடு நோக்கி சென்ற ஆம்னிகார் வேகமாக வந்து எனது தம்பி மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், விபத்தில் எனது தம்பி இறந்துவிட்டதாகவும் கேள்விபட்டேன். தகவல் கேள்விபட்ட நான் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்த்தேன். அப்போது மலையம்பாளையத்தில் இருந்து போலீசார் வந்து பார்த்து கொண்டிருந்தார்கள். பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது தம்பியின் உடலை கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். என் தம்பி மீது மோதிய ஆம்னி காரை ஓட்டிவந்தவர் குட்டபாளையத்தை சேர்ந்த பிரவீன்குமார் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.20 13:13:00 +0530

முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:— இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.07.20 13:13:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 214/2025**
**Prosecution Witness**:3

| Name | Ayyappan (PW3) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of July 2026** by G.Kiruthiga Bench Clerk Grade III, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கொளாநல்லியில் குடியிருந்து கொண்டு மணவறை அலங்கரிக்கும் வேலை செய்து வருகிறேன். கடந்த 07.10.2025ம் தேதி காலை 10.00 மணி சுமாருக்கு கொளாநல்லி இறந்து போன சண்முகம் வீட்டிற்கு அருகில் மலையம்பாளையம் காவல் ஆய்வாளர் ஆம்னி மோதி சண்முகம் இறந்தது சம்பந்தமாக வரைபடம் வரைந்து விசாரித்தார். என்னிடம் கையொப்பம்கேட்டார். நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் சுரேஷ் என்பவரும் கையொப்பம் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலவாது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 06.10.2025ம் தேதி இரவு 10.00 மணி சுமாருக்கு சண்முகம் அவரது வீட்டின் முன்பு உட்கார்ந்து இருந்ததாகவும் அவர் மீது கொடுமுடியில் இருந்து ஈரோடு நோக்கி சென்ற ஆம்னிகார் மோதிவிட்டதாகவும், அதில் சண்முகத்திற்கு தலையில் அடிபட்டு அவர் இறந்துவிட்டதாகவும் கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.07.20 13:13:07 +0530

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.20 13:13:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 214/2025**
**Prosecution Witness**:4

| Name | சுரேஷ் (PW4) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of July 2026** by G.Kiruthiga Bench Clerk Grade III, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கொளாநல்லியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 07.10.2025ம் தேதி காலை 10.00 மணி சுமாருக்கு கொளாநல்லி இரயில் நிலையம் அருகில் உள்ள பாவாத்தாள் வீட்டிற்கு அருகில் மலையம்பாளையம் காவல் ஆய்வாளர் விபத்தில் சண்முகம் இறந்தது சம்பந்தமாக வரைபடம் வரைந்து விசாரித்தார். என்னிடம் கையொப்பம் கேட்டார். நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் அய்யப்பன் என்பரும் கையொப்பம் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 06.10.2025ம் தேதி இரவு 10.00 மணி சுமாருக்கு சண்முகம் அவரது வீட்டின் முன்பு உட்கார்ந்து இருந்ததாகவும் அவர் மீது கொடுமுடியில் இருந்து ஈரோடு நோக்கி சென்ற ஆம்னிகார் மோதிவிட்டதாகவும், அதில் சண்முகத்திற்கு தலையில் அடிபட்டு அவர் இறந்துவிட்டதாகவும் கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.07.20
13:13:16 +0530

முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.07.20 13:13:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.